பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 27 சனிக்கிழமை (10-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 76

# பலத்த பாதுகாப்புடன் ஜனாதிபதி

# நேற்று நாடாளுமன்றுக்கு வந்தார்!

## ஜெயவர்த்தனபுரவுக்கு ஹெலியில் வந்திறங்கினார்

கொழும்பு, பெப்வரி 10

நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அங்கு வந்த சமயம் அவருக்கு முன் எப்போதுமில்லாதவாறு அதிஉச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டது. வழமையாக வாகனத்தொடர் அணியில் வரும் ஜனாதிபதி நேற்று ஹெலிக்கொப்டரில் நேரடியாக ஜெயவர்த்தனபுர வந்து நாடாளுமன்ற வளாகப் பகுதிக்குள் இறங்கினார்.

நாடாளுமன்றத்துக்கு வெளியே விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

நாடாளுமன்றப் பகுதியில் அமைந்துள்ள தியவன்ன ஓயாவில் விடுதலைப் புலிகளின் சுழியோடிகளின் எந்தவொரு தாக்குதலையும் முடியடிப்பதற்கு ஆயத்தமாகக் கடற்படைப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை முன்னிட்டு நாடாளுமன்றத்துக்குச் செல்லும சகல வீதிகளும் சுமார் நான்கு மணி நேரம் மூடப்பட்டிருந்தன. இதனால் வீதிகள் வெறிச் சோடி மக்கள் நடமாட்டம் இன்றிக் காணப்பட்டன. அரச ஊழியர்களும் மிகவும் குறைவாகவே கடமைக்குச் சமுகமளித்திருந்தனர் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றை ஐ. தே. க. பகிஷ்கரிப்பு

கொழும்பு, பெப். 10

நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்த வைபவத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. நேற்று பகிஷ்கரித்தது

நாடாளுமன்ற வளவுக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்களுடன் வரக்கூடாது என அரசு அறிவித்ததை கண்டித்தே ஐ. தே. க. இந்த வைபவத்தை பகிஷ்கரித்தது.

(இ-3-6)

## பாதுகாப்பற்ற நகரமாக கொழும்பு மாறிவிட்டது

### ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 10

கொழும்பு மாநகரம் இன்று பாதுகாப்பற்ற நகரமாக மாறிவிட்டது..

இப்படி எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவசரகால நீடிப்பு பிரேரணை விவாதத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் இல்லை. அவர்கள் முல்லைத்திவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களுக்கு முறையாக நிவாரணம் வழங்கப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை முறியடிக்க வெளிநாட்டு உதவி கோருகிறார் சந்திரிகா

நாட்டில் நடைபெறும் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு —

வெளிநாடுகளைக் கேட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பத்தாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை நேற்று ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே ஜனாதிபதி இப்படி ஒரு கோரிக்கையை விடுத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட நலன்களைக் கவனிப்பதோடு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தைரியமும் திறமையும் தமக்கு உண்டு என்றும் —

பயங்கரவாதத்தைத முறியடித்து இனப்பிரச்சினை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தினமும் படையினர் சுற்றிவளைப்பு

சாவகச்சேரி, பெப். 10

திருகோணமலையில் நாளாந்தம் சராசரியாக மூன்று இடங்களில் தேடுதல்கள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

திடீர், திடீரென கிராமங்களுக்குள் நுழையும் இராணுவத்தினரும், பொலிஸாரும் கிராமங்களை சுற்றிவளைத்து முற்றுகையிடுகின்றனர்.

படையினரின் சுற்றிவளைப்புப் பிரதேசத்துக்குள் உள்ளே வரும் மக்கள் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவதில்லை. தமது தேடுதல் நடவடிக்கைகள் முற்றுப்பெறும் வரை அந்தக் கிராமங்களுக்கான பாதைகள் அனைத்தையும் அடைத்து வெளித் தொடர்புகளைத் துண்டித்து முடக்கி விடுகின்றனர்.

சுற்றிவளைப்புத் தேடுதல்கள் முடிவடைந்து கிராமத்திலிருந்து வெளியேறும் மக்கள் குறித்த ஒரு பாதையினூடாகவே வெளியேற வேண்டுமென படையினர் உத்தரவிடுகின்றனர். (இ-7)

## வாசகர்களே!

பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு காரணமாக அச்சிடும் பத்திரிகைகளின் எண்ணிக்கையை கணிசமான அளவு குறைக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்பதை உங்களுக்கு முன் கூட்டியே அறியத் தருகின்றோம்.

இதனால் காலையில் உதயன் உங்கள் கைகளுக்கு கிடைப்பதில் நெருக்கடி ஏற்படக் கூடும். எனவே நேரத்துடனேயே உங்கள் முகவரிடம் பதிவு செய்து உதயன் பிரதி நாளாந்தம் உங்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்களில ஏற்படும் இந்த நெருக்கடியை வாசகர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

—நிர்வாகத்தினர் —

## மாஹோ, ஹபரன கப்பல்கள் வருகின்றன

சாவகச்சேரி, பெப். 10

குடாநாட்டுக்கு 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் மற்றும் ப.நோ.கூ. சங்கங்களுக்கான உணவுப் பொருள்களுடன் ''மாஹோ'' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட இக்கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்துசேரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### உலக கிண்ண கிரிக்கெட்:

## போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் ஐ. நா. உதவியை நாடுகின்றனர்

லண்டன், பெப். 10

ஆஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகள் அணிகள் இலங்கையில் விளையாட மறுத்ததை அடுத்து உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்துவதில் ஏற்பட்டுள்ளசிக்கல் நிலைக்குத் தீர்வு காண்பதற்கு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் ஐ. நா. வின் உதவியை நாடியுள்ளனர்.

இந்த போட்டி ஏற்பாட்டுக் குழுவில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அங்கம் வகிப்பது தெரிந்ததே.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இலங்கையில் நடைபெறுவது பாதுகாப்பானதாக இருக்குமா என்பதை முடிவு செய்வதற்கு ஐ. நா. சபை உதவ வேண்டும் என்று கிரிக்கெட் போட்டி ஏற்பாட்டுக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

பார்வையாளர் ஒருவரை இலங்கைக்கு அனுப்புமாறு, கிரிக்கெட் சர்வதேச அமைப்பு ஐ. நா. சபையைக் கேட்க வேண்டும் என்றும் இக்குழு கேட்டுள்ளது. (இ-3)

## ஐ. நா.வின் உதவி சாத்தியம் இல்லை

### பி.பி.ஸிக்கு ஐ.நா. பிரதிநிதி பேட்டி

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இலங்கையில் நடத்துவது குறித்து எமது உதவி இதுவரை கோரப்படவில்லை என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஐ. நா. சபை பிரதிநிதி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ. நா. இதில் சம்பந்தப் [illegible] முடியாது. இலங்கையில் விளையாடுவது பாதுகாப்பானதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிப்பது ஐ. நா. சபையை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளும்.

தனது நாடு பாதுகாப்பானது என்பதை ஆஸ்திரேலியாவுக்கும், மேற்கு இந்தியாவுக்கு உறுதிப்படுத்துவது இலங்கையின் பொறுப்பே அன்றி ஐ. நா.வின் பொறுப்பு அல்ல என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வாக்கெடுப்பு இன்றி நிறைவேறியது

கொழும்பு, பெப். 10

வடக்கு - கிழக்கிலும், கொழும்பின் சில பகுதிகளிலும் அவசரகால சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றில் வாக்கெடுப்பு இல்லாமலே நிறைவேறியது.

[இ-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மிசா ரவல்ஸ்

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட வயோதிபர்களும், நோயாளிகளும் எமது அலுவலகத்தில் உடன் சந்திக்கவும்.

(40636)

# சகல அங்கத்தவர்களுக்கும்

சகல அங்கத்தவர்களுக்கு இத்தால் அறிவிப்பது, தாங்கள் இடம்பெயர்ந்து வசிக்கும் மாவட்டத்தில் உள்ள தமிழீழ நிர்வாக சேவை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, தமிழீழ நிர்வாக சேவையால் வழங்கப்பட்ட பதிவுப் புத்தகத்தில் ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு: தங்கள் முகவரியை எமக்கு அறியத்தரவும்.

மு.சி.சண்முகராசா
செயலாளர்

வடமாகாண ஒப்பந்தக்காரர் சங்கம்,
சாவகச்சேரி பஸ் நிலைய அருகாமை,
சாவகச்சேரி.

(40634)

# மெதடிஸ்த திருச்சபை அறிவித்தல்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அதி வணக்கத்துக்குரிய டுலீப். ஆர். பெர்னாண்டோ அவர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் திட்டமிட்டவாறு வருகை தர முடியவில்லை.

ஆகையால் இன்று (10 - 02 - 1996) நடைபெற இருந்த வடக்கு — கிழக்கு மறைமாவட்டத் தலைவர் அருட்திரு. எஸ். எஸ். கருணைராஜ் அவர்களின் நியமன ஆராதனை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி

★ **11 - 02 - 1996** ஞாயிறு காலை **8. 00** மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் பூரண அங்கத்தவர்களை ஏற்கும் ஆராதனையும் —

★ **11 - 02 - 1996** ஞாயிறு பி.ப. **4. 00** மணிக்கு நேசகத்தில் திருமுழுக்கு ஆராதனையும் — நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

மெதடிஸ்த திருச்சபை,
பருத்தித்துறை — யாழ். சேகரம்

(சி/4022)

# கொழும்பில் ஒரே நாளில் 400 பேர் கைது

கொழும்பு பெப். 10

கடந்த புதன்கிழமை காலை 8 மணிவரையான 24 மணி நேரத்தில் கொழும்பில் படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் 400 பேர் கைது செய்யப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(உ)

# மின்சாரம் வழங்க கோரிக்கை

தாளையடி, பெப் 10

மருதங்கேணி அரசினர் வைத்திய சாலைக்கு வழங்கப் பட்டுள்ள புதிய ஜெனரேட்டரை இயங்க வைத்து வைத்திய சாலைக்கு மின் ஒளியை வழங்குமாறு, மருதங்கேணி ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை சம்பந்தமான கடிதத்தை, யாழ்மாவட்ட அரசாங்க அதிபர், பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர், நோயாளர் நலன்புரிச்சங்கம் ஆகியனவற்றுக்கு பிரஸ்தாப நிலையம் அனுப்பி வைத்துள்ளது.

(இ-144)

# வவுணதீவில் புதிய முகாம்

மட்டக்களப்பையடுத்துள்ள வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவில் 3 ஆம் கட்டை கரடிப்பூ சந்தியில் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு முன்பிருந்த முகாம் மூடப்பட்டு படையினர் யாழ்ப்பாண நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

இதேவேளை— வவுணதீவிலும் புதிய முகாம் ஒன்று கடந்த வாரம் அமைக்கப்பட்டிருந்தது

(இ-3)

# கண்ணீர் அஞ்சலிகள்

எமது கல்லூரியில் 1994 ஆண்டைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர மாணவனான க. சிவதாசனின் தந்தையாரான

**ச. கனகலிங்கம்**

09 - 02 - 96 இறைபதம் அடைந்தார். அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

கொக்குவில் இந்து
94 ஆம் ஆண்டு மாணவர்கள்

(40637)

# மரண அறிவித்தல்கள்

## மருதயினார் செல்லத்துரை

வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது வாணர் குடியிருப்பு, புலோலியில் வசித்தவருமாகிய மருதயினார் செல்லத்துரை அவர்கள் 09 - 02 - 96 வெள்ளிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மருதயினார் ஆச்சிமுத்து தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற செல்லாச்சி (யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் செல்வமுத்து தம்பதிகளின் மருமகனும், பாக்கியலெட்சுமி அவர்களின் அன்புக்கணவரும், நடராசா (அதிபர்; வேலணை ஐயனார் வித்தியாசாலை), யோகராசா (ஓய்வுபெற்ற மருந்தாளர், சிற்றி மெடிக்கல்ஸ் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சௌந்தரராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ந. புவனேஸ்வரி, யோகராசா சிவசோதி (யாழ் பிரதேச செயலகம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற மயில்வாகனம் (யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கோமளாதேவி, மற்றும் சியாமளா, ஜெயகரன் (யாழ். இந்துக் கல்லூரி A/L 97), திவாகரன் (யாழ். பரியோவான் கல்லூரி A/L 95), சிவாகரன் (யாழ். இந்துக்கல்லூரி A/L 97), காலஞ்சென்ற யோதிகா ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற தில்லையம்பலம் தம்பதிகளினதும் மற்றும் தருமபாலு தம்பதிகளினதும் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-02-96 (இன்று) மு.ப 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் எரிந்த அம்மன் கோவிலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
செ. யோகராசா
(மகன்)

தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் பாடசாலைஅருகில்,
வாணர்குடியிருப்பு,
தம்பசிட்டி,
புலோலி.

(40715)

## சுப்பிரமணியம் சந்திரசேகரம்பிள்ளை

கோண்டாவில் கிழக்கு பழைய காளி கோயிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சந்திரசேகரபிள்ளை நேற்று காலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், புஸ்பநாதன், சத்தியநாதன், தபேந்திரநாதன், கமலநாயகி, கெங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இவரின் ஈமைக்கிரியைகள் நேற்று மாலை 4 மணியளவில் கிழ் வரும் விலாசத்தில் நடைபெற்றன.

தகவல்:
சத்தியநாதன்
(மகன்)

வல்லிபுரம் நாகேஸ்வரன்
கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி

(40632)

## யேசுதாசன் கோ. போல்

(Retd. Forman, Cement Factory, K. K. S.)

நவாலியூரைப் பிறப்பிடமாகவும், தந்தை செல்வாபுரம் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் கோ. போல் அவர்கள் 8-2-96 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி யேசுதாசனின் அன்பு மகனும், திருமதி இராஜேஸ்வரி போல் அவர்களின் அன்புக் கணவனும், திருமதி தீபம் இராஜநாயகி பெஞ்சமின் (மன்னார்), செல்விகள் பேள் லோகநாயகி (சலுசல கூட்டுத்தாபனம், கொழும்பு), டெய்சி தேவநாயகி (ஆசிரியை யா/ மகாஜனாக் கல்லூரி), றூபி செல்வநாயகி (ஆசிரியை, யா/ அருணோதயாக் கல்லூரி), கிறேஸ் ஜெபநாயகி (யா/ தொழில் நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. அன்ரன் பெஞ்சமின் (நில அளவையாளர், மன்னார்) அவர்களின் மாமனாரும், சன்ரோனியா, கிருபாநிதி, ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (10 - 02 - 96) சனிக்கிழமை கொழும்பில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி போல்
(மனைவி)

தற்காலிக முகவரி:
திரு. டேவிற் தேவதிரவியம்,
மாதா கோவிலடி,
தவசி குளம்,
மிருசுவில்.

(40713)

உ
பிள்ளையார் துணை

# விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்,

விநாயகப்பெருமான் துணையுடன், ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் யுவ வருஷம் தை மீ **28** ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (11-02-96) கிருஷ்ணபக்ஷ ஸப்தமி திதி சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும் சேர்ந்த நன் நாளில் காலை **9-15** முதல் **10-15** மணி வரை மேஷலக்ன சுப முகூர்த்தத்தில்

கீரிமலை
நகுலேஸ்வர ஆதீனத்தைச் சார்ந்த
சிவஸ்ரீ ச. நாராயண சர்மா
தம்பதிகளின்
சிமந்த புத்திரி சௌபாக்கியவதி
**சீதாதேவியை**

உரும்பிராய்
ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணிய சுவாமி
கோவில்
பிரதமகுரு
சிவஸ்ரீ ச. சிவஞானகுருக்கள்
தம்பதிகளின்
சிமந்த புத்திரன் சிரஞ்சீவி
**ஜெகதீஸ்வர சர்மாவுக்கு**
(விம்பிள்டன் பிள்ளையார் கோவில், லண்டன்)

இலண்டன் விம்பிள்டன் ஸ்ரீ சக்தி விநாயகர் துணையுடனும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு அவர்களது அனுக்கிரகத்துடனும், சிவஸ்ரீ த. மகாதேவ குருக்கள், தர்மஸாஸ்தா குருகுலம், இணுவில் அவர்களின் ஆசியுடனும், பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் நியாய சிரோமணி சிவானந்த குருகுல அதிபர், நல்லூர் அவர்களின் ஆசியுடனும் விவாகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

மேற்படி வைபவம் அருள்மிகு சித்திவிநாயகர் கோவில் தம்பையா முதலியார் சத்திரத்தில் (30, செண். அந்தோனிஸ் மாவத்தை, கொச்சிக்கடை, கொழும்பு - 13) பெரியோர்கள் முன்னிலையில் கன்னிகாதான மாங்கல்ய தாரண பாணி கிரஹணம் செய்ய நிச்சயித்துள்ளதால் அத்தருணம் தாங்கள் இஷ்ட மித்திர குடும்ப சமேதராக சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு

✶ அன்புடன் அழைக்கின்றோம். ✶

சமாவர்த்தனம்; 11-02-1996 காலை 6. 35

உத்வாஹகுரு: நயினை பிரதிஸ்டா பூஷணம்
சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வர சிவாச்சார்ரியார்

தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ ச. நாராயண சர்மா
தம்பதிகள்
(சிவன் கோவிலடி புத்தூர்)
பிரம்மஸ்ரீ ப. குமாரசாமி ஐயர்
மே/பா. எஸ். தவராஜா,
துரையன் தோட்டம்,
நவிண்டில், கரவெட்டி.

சிவஸ்ரீ ச. சிவஞானக் குருக்கள்
தம்பதிகள்
[ஞானம் ஐயர்]
(ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணிய கோவில், உரும்பிராய்)

40714

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தும்பளை புனித லூர்து அன்னை திருவிழா சிறப்பிதழ்

11 – 02 – 96

## அடைக்கலம் தேடி ஓடி வருவோரை அரவணைக்கும் லூர்து அன்னை

வட தமிழீழத்தின் முடியெனத் திகழும் பருத்தித்துறை நகரின் கிழக்கே ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தும்பளைப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனித லூர்து அன்னையின் ஆலயம் மிகவும் பழைமை வாய்ந்த பிரசித்தி பெற்ற கத்தோலிக்க திருத்தலமாகும்.

இத்திருத்தலத்தில், அருஞ்செயல்களால் விளங்கி வரும் மாதாவின் சுரூபம் ஒன்று உலாந்தாக்காரர் (ஒல்லாந்தர்) இலங்கையை ஆண்ட பூர்வகாலந்தொட்டு மகா பூச்சியமாய் அமலோற்பவி நாமத்தால் வணங்கப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலத்தில் ஒரு கொட்டிலில் மாதா சுரூபம் வைத்து வழிபட்டு வரப்பட்டது.

கடந்த நூற்றாண்டின் இறுதியில் இக்கோவில் இருந்த இடத்தில் புனித லூர்து அன்னையின் பெயரால் கெபி (குகை வடிவில்) ஸ்தாபிக்கப்பட்டது. இப்புண்ணிய தலம் புனித லூர்து அன்னையின் புதுமைச் செயல்களால் புகழ்பெற்று விளங்கத் தொடங்கியது.

### மதப்பற்றும் வைராக்கியமும்

பல்லாண்டுகளாக தும்பளைப்பதியில் விசுவாசம் நிறைந்த கத்தோலிக்கர் தம் மதத்தில் பற்றும் வைராக்கியமும் உடையோராய் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒரு பக்தருக்கு புனித அன்னையாம் மரியாள் இராக்காலங்களில் தூய வெண்ணிற ஆடை அணிந்து கையில் மெழுகுவர்த்தியுடன் தற்போது ''கெபி'' அமைக்கப்பட்டிருக்கும் வளவுக்குள் காட்சி தருவதுண்டு என்று அவ்வூர் மக்களுக்கு அவர் எடுத்துக் கூறினார்.

அப்பக்தரின் கருத்துப்படி அங்கு காட்சி தருவது புனித அன்னையாம் மரியாள் என உறுதி கொண்ட அவ்வூர் கத்தோலிக்க மக்கள், அப்புனித அன்னைக்கு அந்த வளவினுள்ளேயே கோவில் அமைக்க எண்ணி கடலில் கண்டெடுக்கப்பட்ட புனித லூர்து அன்னையின் சுரூபத்தை கொட்டில் ஒன்றில் வைத்து வணங்கத் தொடங்கினர்.

புனித லூர்து அன்னையின் திருச் சுரூபம் கண்டெடுக்கப்பட்டது பற்றி பரம்பரைக் கதை ஒன்று உண்டு. தும்பளை பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்கர் ஒருவர் (ஒல்லாந்தர் காலத்தில்) தன் தொழில் காரணமாகக் கடல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்ற போது, கப்பலிலிருந்த சில பிற சமயத்தவர் அவரை கத்தோலிக்கர் என்றறிந்து கடலில் தள்ளிவிட, அவர் பல மைல் தூரம் கடலில் நீந்தி வரும்போது தற்செயலாக கடலின் அடிப் பாகத்தில் தத்தளித்துச் சென்ற விடத்து புனித லூர்து அன்னையின் சுரூபம் ஒன்று அவர் கைக்கு கிடைத்தது.

அப்புனித லூர்து அன்னையின் உருவச் சிலையுடன் தப்பிக் கரையை அடைந்த அப்பக்தர் அப்புனித அன்னையின் சுரூபத்தினைப் பாதுகாப்பாக வைத்து வணங்கி வந்தார். பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய அவ் அன்னையைப் பற்றிய செய்தி பரவவே அவளுக்கு ஒரு கோவில் அமைக்கப்பட்டது.

இக் கோவில் அமைந்த வளவானது பள்ளமானதாகையால் அங்கு கொட்டிலில் அமைக்கப்பட்ட கோவிலை, அதன் தெற்குப் பக்கத்திலுள்ளவளவில் கட்டடகோவிலாகக்கட்டி!அதை தேவமாதா கோவில் என்று அழைத்து வந்தனர். முன்பு கொட்டில் வடிவில் இருந்த கோவில் அமைந்த இடத்திலேயே கடந்த நூற்றாண்டின் இறுதியில் லூர்து ''கெபி''யை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதுவே இன்று புதுமையுடனும், புகழுடனும் விளங்கும் புனித லூர்து அன்னையின் திருத்தலமாகும்

### சிறுமிக்குத் தரிசனம்

இங்கு கட்டப்பட்டிருக்கும் ''கெபி'' (குகையும் மலை வடிவும்) யானது பிரான்ஸ் நாட்டில் பிரனீஸ் மலைத் தொடரின் லூர்து என்னும் இடத்தில் 1858ஆம் ஆண்டில் புனித மரியாள் ஓர் ஏழைச் சிறுமிக்கு காட்சி கொடுத்த சம்பவத்தை நினைவு கூரச் செய்கிறது.

கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த 'பெர்னதேத்' என்னும் பெயர்கொண்ட அச்சிறுமிக்கு இறைவனின் தாயாகிய புனித மரியாள் காட்சி கொடுத்தாள்.

அச்சம்பவம் நடைபெற்ற நாள் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஆகும். அந்நாளில் பெர்னதேத் என்னும் சிறுமிக்கு காட்சி அளித்த போது புனிதமரியாள் கூறியது மிக முக்கியமானது. ''நாமே அமலோற்பவம்'' என்று தன்னை இறைவனின் தாயாகிய மரியாள் வெளிப்படுத்தினாள்.

அது மட்டுமல்ல, அவ்வேளையில் அவ்விடத்தில் ஒரு சிறு நீரூற்றைத் தாராளமாகச் சுரந்து ஓடச் செய்தாள் அச்சம்பவமே உலகில் மிகப் பெரிய அதிசயமாகும். இன்றும் லூர்து என்னும் இடத்தில் ஓடிக்கொண்டிருக்கும் புனித நீரூற்றிலிருந்து பெறப்படும் ''புனித நீர்'' உலகிலுள்ள மக்களின் தீராத நோய்களைக் (உடல், உள் நோய்களை) குணமாக்கி வருகின்றது.

அத்தகைய புதுமை நிறைந்த லூர்து கெபிக்கு பல்லாயிரக்கணக்கானோர் யாத்திரை மேற்கொண்டு செல்வது அனைவரும் அறிந்ததே.

பலரையும் ஆழ்ந்து சிந்திக்க வைக்கவும், பலருக்கு அதிசயத்தைக் கொடுக்கவும் வல்ல புதுமைகள், புனித லூர்து அன்னையின் பெயரால் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் தும்பளைப் பதியின் புனித சேத்திரத்திலும் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குணமாகாத நோய்களைக் குணமாக்கியும், காணாமற் போன பண்டங்களை கண்டடையச் செய்தும் பல புதுமைச் செயல்கள் நடைபெறுவதனால் பக்தர்கள் இத் திருத்தலத்துக்கு யாத்திரை மேற்கொள்கின்றனர்.

புனித லூர்து அன்னையின் பெயரால் ஆசீர்வதிக்கப்பட்ட புனித நீரை இத்தலத்திலிருந்து பெற்று, அதனைப் பயன்படுத்தி தம் தொழில்களை வளத்துடன் செய்து கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

புனித அன்னையின் பெயரினால் ஆசீர்வதிக்கப்பட்ட நீரைப் பருகியும் மக்கள் தம் உடலுள நோய்களிலிருந்து குணமாகியும் வரும் அருஞ்செயல்களும் நடைபெறுகின்றன.

இத்தகைய புதுமைச்செயல்கள் மட்டுமன்றி, புனித லூர்து அன்னையின் மூலம் இறைவனிடமிருந்து பல நன்மைகளை மக்கள் பெற்றிருக்கின்றனர். அதற்குச் சான்றாக திருப்பலிகள் இத்திருத்தலத்தில் நிறைவேற்றப்படுவதுடன் நேர்த்திக்காக அன்னதானங்களும் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### அனைவரும் போற்றும் தலம்

இவ்வாறு புகழுடன் விளங்கும் இப்புண்ணியதலம் அப்பகுதி மக்களால் மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளேயும் வெளியேயும் உள்ள மக்களாலும் போற்றிப் புகழப்பட்டு வருகின்றது.

''தாயே! நீயே அடைக்கலம்'' என்று ஓடிவந்து அவள் பாதத்தில் சரண் அடைபவர்கள் ஆறுதல் அடையாமல் போனதே கிடையாதென்பதை, நாளாந்தமும் விசேடமாகச் சனிக்கிழமைகளிலும் அங்கு சென்று வழிபடும் அடியார் கூட்டத்தின் எண்ணிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

இத்திருத்தலத்தின் வருடாந்த உற்சவம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகி 11 ஆம் திகதி காலைத் திருவிழாத் திருப்பலியுடன் முடிவடைவது வழக்கம்.

அத்திருவிழாவுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து கூடி புனித லூர்த் அன்னையின் அருளையும் ஆசியையும் பெற்றுச் செல்வர்.

வாழ்க புனித லூர்து அன்னையின் நாமம்!

வளர்க புனித லூர்து அன்னையின் தலம்! ★

எஸ். அந்தோனிமுத்து
(முன்னாள் விரிவுரையாளர்)
புனித மரியாள் ஆலயம், தும்பளை

## பங்குத் தந்தையின் ஆசி

வடமராட்சியில் கத்தோலிக்க மக்களின் திருயாத்திரை ஸ்தலமாக அமைவது தும்பளையில் உள்ள புனித லூர்து அன்னை ஆலயம். பிரான்ஸ் தேசத்தில் லூர்து நகரில் அன்னை மரியாள் ஒரு சிறுமிக்குக் காட்சி கொடுத்து மனித குலத்தின் மத்தியில் தான் ''அமல உற்பவி'' என்பதை உலக மக்களுக்கு எடுத்துக் காட்டியது மாத்திரமல்ல, இறைவனிடம் மக்களுக்காகப் பரிந்து பேசுகிற மத்தியஸ்தியாகவும் ஓர் அன்னையாகவும் விளங்குகிறாள் என்பதை எடுத்துக் காட்டினாள்.

இக் காலகட்டத்தில் அவள் எம் மக்களுக்காகப் பரிந்து பேசத் தயாராக இருக்கிறாள். எம்முடைய துன்ப துயர வேளைகளில், இடம்பெயர்ந்து எத்தனையோ இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் எமக்கு ஆறுதலைத் தந்து வழி நடத்த அவளிடம் வேண்டுவோம். புனித லூர்து அன்னையின் ஆசீர் எம் மக்கள் அனைவருக்கும் கிடைப்பதாக.

பி. எம். இம்மானுவேல்
பங்குத் தந்தை,
பருத்தித்துறை.

## அல்லலுறுவோருக்கு தஞ்சம் அளிப்பவள்

மாசில்லா உற்பவியும், இறைவனின் அன்னையுமான புனித மரியன்னை பிரான்ஸ் நாட்டின் தெற்கெல்லையில் உள்ள பிறனீஸ் மலைத் தொடரிலே அமைந்துள்ள 'லூர்து' என்னும் சிறு நகருக்கு அண்மையில் உள்ள மசபியேல் குகையில் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆடுகளை மேய்த்து வந்த பெர்னதேத் என்னும் சிறு பெண்ணுக்குப் பல தடவைகள் காட்சி கொடுத்து ''நானே அமல உற்பவம்'' என்னும் உண்மையை வெளியிட்டதுடன் பல அருஞ்செயல்களையும் காட்டினார்.

அக் காட்சியின் போது, அச்சிறுமியிடம் தரையைத் தோண்டும் படி சைகை மூலம் அறிவிக்க சிறுமியும் அப்படியே செய்தாள்.

அன்று சிறு அருவியாக ஊற்றெடுத்த அந்த ஊற்று இன்று வரை ஓர் ஆறாகப் பாய்ந்து கொண்டே இருக்கிறது.

அவ்வாற்றில் பெறப்படும் ''புனித நீரை'' பயன்படுத்தும் சகல நோயாளர்களும் குணமடைந்துள்ளனர்.

தேவ அன்னையின் இந்த அற்புதச் செயலை வைத்திய நிபுணர்களும், உளவியலாளர்களும் தம் ஆய்வுகளின் மூலம் இவை யாவும் ஓர் அற்புதச் செயல் என்றே நிருபித்துள்ளனர்.

இவ்வித மகிமை பொருந்திய லூர்து அன்னையின் திருத்தலம் பிரான்ஸ் நாட்டில் இன்றும் பல அற்புதங்களைக் காட்டி மக்களைக் கவரும் தலமாக உலக யாத்திரிகர்களைத் தன்னகத்தே ஈர்க்கின்றது.

### அபயம் அளிக்கும் தாய்

இதே திருத்தலத்தின் நினைவாகவும், மரியன்னையின் புகழ் பொலியும் தலமாகவும் வட இலங்கையிலே பருத்தித்துறை மறைப்பிரிவிலுள்ள தும்பளைப் பதியிலே கோவில் கொண்டுள்ள மாசில்லாத் தாயான லூர்து அன்னை விளங்கியுள்ளார் அவள் தன்னை நாடிவரும் பக்த கோடிகளை எல்லாம் அரவதணைக்கும் அன்னையாகவும், அல்லலுற்று வருவோரையும் தீராப் பிணியுடன் வருவோரையும் குணமாக்கும் தாயாகவும் திகழ்கின்றாள்.

விசேடமாக இக்கால கட்டத்திலே தமிழ் மண்ணிலே நடைபெறும் போர்க் கொடுமையின் மத்தியிலே அபயம் அளிக்கும் ஆறுதல் கொடுக்கும் தாயாகவும் அவள் திகழ்கின்றாள்.

1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற வடமராட்சி 'ஒப்பறேசன் லிபறேசன்' என்ற இராணுவ நடவடிக்கையின் போது பருத்தித்துறைப் பகுதியில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத வேறுபாடின்றி அன்னையின் தலத்தில் கூடி அன்னையின் அருள் வேண்டி அபயம் அடைந்தனர். மாதக் கணக்காக ''தாயே! உன் தஞ்சம்'' என் அவள் பாதத்தில் தங்கியிருந்தனர். கருணா சமுத்திரமான இறைவனும் லூர்து அன்னையின் பரிந்துரையை ஏற்று மக்களை ஆசீர்வதித்துக் காப்பாற்றி அல்லல் நீக்கினார்.

இன்றும் இதே பாங்காக அல்லலுறுவோரை எல்லாம் லூர்து அன்னை அரவணைத்துத் தஞ்சமளித்து அருள் பொழிந்து வருகின்றாள்.

லூர்து தாயே! நீரே எம் அபயம்; நீரே எம் அடைக்கலம் என மன்றாடுவோமாக. ★

தே. செபமாலை
(முன்னாள் அதிபர்)
புனித மரியாள் ஆலயம், தும்பளை.

## நிகழ்ச்சிகள்

10ஆம் திகதி — நற்கருணைத் தினம் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்

11ஆம் திகதி -- திருவிழாப் பூசைப்பலிகள்.
1ஆம் பூசைப்பலி காலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும். 2ஆம் பூசைப்பலி காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

★ பலிப்பூசைகள் முடிந்ததும் திருச்சுரூப ஆசீர்வாதம் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி T. V. + நஷனல் டெக் 20,000/-, சிங்கர் தையல் மெஷின் 8,000/-, ஏஸியா மகளிர் 5000/-, லுமாலா மகளிர் 4000/, எலக்றோனிக் சுவர் மணிக்கூடு 500/-, ட்ரான்சிஸ்டர் 1000/- தொடர்பு; திருமதி கமலா தேவி, மே/பா, A. ஜெயபாலன், சரசாலை வடக்கு, சாவகச்சேரி (சுன்னாகம் தபாற்கந்தோர் முன்பாக). (40710)

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், வீவா (பிளாஸ்ரிக் மூடியுடன்), பியர் அல்லது நெல்லிக்கிறஸ், ஜாம், கோடியல் போத்தல்களை சாவகச்சேரியில் உள்ள ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், கிரியோன் கூல் பார், சிறீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் ஆகிய இடங்களில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளவும். ரேஸ் லைன் இன்டஸ்றீஸ் (தனி) வரை. (சி-4001)

### திருமண சேவை

கே. கே. எஸ். றோட், மல்லாகம், வளர்மதி இல்லத்தில் இயங்கி வந்த துர்க்கா திருமண சேவை தற்பொழுது இல. 15, கந்தஉடையார் லேன், பருத்தித்துறையில் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். (40119)

### மணமகன் தேவை

லக்கினத்தில் செவ்வாய், நட்சத்திரம் சதயம் 2ஆம் பாதம், வயது 26, வெளிநாட்டு நிறுவனம் ஒன்றில் லிகிதராக கடமையாற்றும் A/L படித்த பெண்ணுக்கு தகுந்த வரன் தேவை. இல. 52, C/o உதயன், சரசாலை தெற்கு. (40615)

### கணனி வகுப்புக்கள்

பிரத்தியேக கணனி வகுப்புக்கள் ஆரம்பம்: 10-2-96 / 14-2-96— 9-00 A.m. (Basic, Pascal, C++, dBASE III +, Lotus) தொடர்புகளுக்கு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி, நெல்லியடி. (40124)


## கிளிநொச்சியில் உளவியல் பயிற்சி கருத்தரங்கு

கிளிநொச்சி, பெப். 10

இடம்பெயர்ந்த மக்களுக்கு பணியாற்ற, உளவியல் பயிற்சி பெறுவதற்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி கிளிநொச்சியில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் நடைபெறவிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உளவியல் சார்ந்த சேவைகளை வழங்கும் வகையில், ஏற்கனவே யாழ். சாந்திகத்திலும், ஐ சீ. ஓ. எவ் நிலையத்திலும், முல்லைத்தீவு ரெட்பானாவிலும் பயிற்சி பெற்றவர்களுக்கும்—

மேலும் புதிதாக பயிற்சி பெற விரும்புபவர்களுக்கும்— இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இரண்டு வார கால பயிற்சி அளிக்கப்படும் என்றும்—

பயிற்சி பெற்றவர்களை சிறிய கொடுப்பனவுடன் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும்— ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் தெரிவித்துள்ளது. (இ-3)

### ஸ்ரீலங்காப் படைகளிடம் இல்லாத

# 99 அலை வரிசை தொடர்பு சாதனம் விடுதலைப்புலிகள் வசம் உள்ளது

## சிங்கள நாளிதழ் தகவல்

கொழும்பு, பெப். 10

ஸ்ரீலங்காவின் முப்படைகளிடமோ, பொலிஸாரிடமோ இல்லாத 99 வானொலி அலைவரிசைகளைக் கொண்ட வானொலித் தொடர்பு சாதனம் புலிகளின் தாக்குதல் அணியிடம் உள்ளது. அதன் மூலம் கொழும்பிலிருந்து அவர்களால் மட்டக்களப்புடன் தொடர்பு கொள்ள முடிகிறது.

மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்த தகவலைத் தெரிவித்ததாக ''திவயின'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தகைய வானொலித் தொடர்பு சாதனம் அண்மையில் கொழும்பில் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும்—

கொழும்பில் கைப்பற்றப்பட்ட இரண்டாவது அதி சக்தி வாய்ந்த வானொலித் தொடர்பு சாதனம் இது என்றும்—

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது:

கொழும்பில் பணிபுரியும் பொலிஸாரிடம் ஆகக் கூடியது ஆறு அலை வரிசைகளைக் கொண்டவானொலிச் சாதனமே உள்ளது எனவும்—

குண்டுத் தாக்குதல் அணியிடமிருந்த வானொலித் தொடர்பு சாதனம் தன்னியக்க ''அன்ரனாவைக்'' கொண்டது எனவும் —

இந்த உபகரணத்தைப் பயன்படுத்தியே மட்டக்களப்புடன் தொடர்பு கொண்டு கட்டளைகளை அவர்கள் பெற்று வந்தார்கள் எனவும்— அந்தப்பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் அதிகாரி ஒருவர் இந்த உபகரணத்தைசெயற்படுத்தி தமிழ் மொழியில் தொடர்பு கொண்ட போதிலும் பதிலேதும் கிடைக்கவில்லை என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது. (உ-10)


## தேவை

★ தேநீர் தயாரிப்பவர் (Tea Maker)

அனுபவம் உள்ளவர்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் நேரில் சந்திக்கவும்.

**சுவையருவி**

பேருந்து நிலையம், நெல்லியடி.

(40599)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள புதிய மாருதி எஞ்சின் 10. H. P. விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**சுவையருவி**

பேருந்து நிலையம், நெல்லியடி.

(49598)

## உதவி

மக்களே!

**உங்களுக்கு வேண்டாதவை எவை?**
**எங்களுக்கு வேண்டுவன எவை?**

உங்களிடம் உள்ள வெற்று பியர், ஜாம், கோடியல், ஹொர்லிச்ஸ், வீவா போத்தல்கள்.

'காலத்தால் செய்த உதவி ஞாலத்தில் மானப் பெரிது'

ஆகவே காலமறிந்து நீங்கள் தந்து உதவும் மேற்படி ஒவ்வொரு வெற்றுப் போத்தல்களும் எமது நிறுவனத்தை வாழ வைக்கும்.

''நன்றே செய்க. அதுவும் இன்றே செய்க''

ஆகவே உங்களிடம் உள்ள மேற்படி வெற்றுப் போத்தல்களை இன்றே ரேஸ்ரி வெற்றுப் போத்தல் சேகரிப்பு நிலையங்களில் ஒப்படைத்து பணத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் ஆதரவில் எங்களின் வளர்ச்சி
எங்களின் வளர்ச்சியில் பொருளாதாரத்தின் உயர்ச்சி

ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) வரையுள்ளது

(சி-4017)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிக் கிரியை அழைப்பும்

மண்ணில்: 10 — 04 — 1929



விண்ணில்: 11 — 01 — 1996

## திருமதி இராசையா மனோன்மணி

(அல்லாரை வடக்கு, கொடிகாமம்)

அன்னையே எங்கள் ஆருயிரே அற்புதமே
இன்னலின்றி இன்பமுடன் வளர்த்தாயே-என்புருகி
கண்கலங்கி நாமலறக் காசினியை நீத்தின்று
விண்புகுந்த தென்னோ நீ சொல்?

இன்று 10 - 02 - 1996 சனிக்கிழமை நடைபெறவுள்ள சபிண்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

மருதடிப் பிள்ளையார் கோவிலடி,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம். (40597)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996-02-10 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — நீங்கள் கேட்டவை
- ★ 8-30 — செய்திகள்.
- ★ 8-40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

1996-02-11 காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 — மாவீரர் வணக்கம்
- ★ 7-10 — களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகள் தொடர்ந்து 8.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

## பங்கு வியாபாரம் நிறுத்தம்

மத்தியவங்கி குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட 22 நிறுவனங்களின் பங்கு வியாபாரம் கொழும்பு பங்குச் சந்தையில் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதிமுதல் பங்கு சந்தையில் 22 நிறுவனங்களின் பங்கு விற்பனை நிறுத்தப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்பின் போது ஹாசன் கம்பெனியின் ஆவணங்கள் அழிந்து விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வுப் பணி பூர்த்தி

சாவகச்சேரி, பெப். 10

பங்கீட்டு அட்டைகளை மீள் பரிசீலனை செய்யும் வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. கா. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் கிராம சேவையாளர் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பங்கீட்டு அட்டை மீள் பரிசீலனை வேலைகள், கடந்த மாதம் 30 ஆம் திகதி முதல் தென்மராட்சியில் வலயச் செயலகங்களிலும், வடமராட்சியில் பிரதேச செயலர் பிரிவு அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பெரும்பாலானவர்கள் தமதுமீளாய்வுவேலைகளைப் பூர்த்தி செய்துள்ளதை அடுத்து மீளாய்வு வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன என்றும்.—

இதுவரை பங்கீட்டு அட்டையை மீளாய்வு செய்யாதவர்கள் இனி புதிய பங்கீட்டு அட்டைக்கு விண்ணப்பித்தே தமக்குரிய பங்கீட்டு அட்டைகளைப் பெற வேண்டும் என்றும்—

திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-7)

### ஜனாதிபதி ஆணைக்குழு முன்

# டக்ளஸ் தேவானந்தாவை சாட்சியம் அளிக்க அழைப்பு

கொழும்பு, பெப். 10

கடந்த பொதுத் தேர்தலின் போதும், 1994 மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போதும் தேர்தலைக் குழப்பும் நோக்கில் ஆயுதப் படையினரின் தலையீடு இருந்ததா எனக் கண்டறிவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனி நபர் ஆணைக்குழு ஈ. பி. டி. பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை சாட்சியமளிக்க அழைப்பது என்று தீர்மானித்துள்ளது.

இதன்படி அடுத்த மாதம் 18ஆம் திகதி டக்ளஸ் தேவானந்தா ஆணைக்குழு முன் ஆஜராக வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## தொழில்நுட்ப கல்லூரி பரீட்சைகள்

சாவகச்சேரி, பெப். 10

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வணிகடிப்ளோமா, வணிக சான்றிதழ், பொறியியல் தொழில் கற்கை, ஆங்கிலம் ஆகிய பயிற்சி நெறிகளின் இறுதிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. க. ஜெயரட்ணம் தெரிவித்தார். (உ-3)

## பற்சிகிச்சை பிரிவு இயங்கவில்லை

தாளையடி, பெப். 10

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வந்த பற்சிகிச்சை நிலையம் தற்போது இயங்காமையினால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பற்சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் இவ் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும், பற்சிகிச்சை வைத்தியர் இன்மையினால் இந்நிலையம் இயங்காமலுள்ளது.

முன்பு மாதத்தில் குறிப்பிட்ட நாள்கள் இந்நிலையம் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-144)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ராஜினாமா செய்வார்களா?

ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் தனது பிரசைகளான சிங்கள மக்களை மட்டுமன்றி, அவர்களின் அரசியல் தலைவர்களைக் கூடக் காப்பாற்ற முடியாத கையறு நிலை உருவாகி உள்ளது.

பத்தாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அங்குரார்ப்பணம் செய்து வைத்த நேற்றைய வைபத்தை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பகிஷ்கரித்தது. மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் சந்திரிகா அரசு — பாதுகாப்புப்படைகள் — எந்தளவுக்குப் பலவீனமாக உள்ளன என்பதனை அது காட்டுகிறது.

ஜனவரி 31ஆம் திகதி நடைபெற்ற மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு, முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்குத் தென்னிலங்கையின்— அங்கு வாழும் மக்களின் — பாதுகாப்பை பெரும் கேள்விக்குறியாக்கி உள்ளது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ, எங்கு குண்டு வெடிக்குமோ, எத்தனை பேர் மரணமாக நேரிடுமோ என்ற அச்சநிலை, உயிர்ப்பாதுகாப்புக்கு உறுதியற்ற நிலை அங்கு தோன்றியுள்ளது.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எந்த எறிகணை எங்கு வந்து விழுந்து எவரைக் கொல்லுமோ, எந்த விமானம் எப்போது வந்து குண்டு வீசி எத்தனை பேரைக் கொல்லுமோ என்று தமிழ் மக்கள் சதா மரண பயத்துடன் வாழும் அதே நிலை, சிங்கள மக்களுக்கு இப்போது வந்திருக்கிறது.

எறிகணை வீச்சினால், குண்டு வீச்சினால் எவ்வாறு ஒரு சில நிமிட நேரத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மாண்டுபோக நேர்ந்ததோ, அதே போன்ற ஒரு நிலை இப்போது தெற்கிலும் தோன்றியுள்ளது.

அரசாங்கப் படைகள் நடத்தும் குண்டுவீச்சுத் தாக்குதல்களால் தமிழ் மக்களின் வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், மருத்துவமனைகள், பணிமனைகள், தொழிற்சாலைகள் எவ்வாறு தவிடுபொடியாகினவோ, கற்குவியல்களாகவும், சாம்பர் மேடுகளாகவும் மாறினவோ—

அத்தகைய ஓர் அழிவுக் காட்சியை தெற்குச் சிங்கள மக்கள் மத்திய வங்கிக் குண்டு வெடிப்பில் தான் கண்டிருப்பார்கள். அதனால் அத்தகைய அழிவுகளைத் தமிழ் மக்கள் போலத் தாமும் தொடர்ந்து சந்திக்க நேரிடுமோ என்ற ஏக்கம் அவர்களை வாட்டுகிறது.

இந்த மனச்சஞ்சலமும் பீதியும் சிங்கள மக்களுக்கு மட்டுமன்றி, அவர்களின் அரசியல் தலைவர்களுக்கும் உண்டாகியிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை நிகழ்ச்சிகளுக்குச் செல்வதுகூட பாதுகாப்பற்ற, உயிருக்கு உத்தரவாதமற்ற நிலைக்கு மாறியிருக்கிறது.

இதற்குப் பின்னர்—

சிங்கள மக்களைப் பாதுகாக்கும் பலம் தன்னிடம் இல்லை என்பதனை ஏற்றுக்கொண்டு அரசு பதவி விலக வேண்டும்.

ஆகக் குறைந்தது பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சரான சந்திரிகாவும், படைகளை வழி நடத்தும் அமைச்சர் அனுருத்தவும் ஆகுதல் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யவேண்டும். செய்வார்களா?

## குடிதண்ணீரில் நஞ்சு நடக்க முடியாத செயல்

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர்

கொழும்பு, பெப். 10

கொழும்பு நகருக்கான நீர் விநியோகத்தைப் பாதுகாப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாக வீடமைப்பு, நிர்மாணத் துறை, பொது வசதிகள் அமைச்சர் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

நகருக்கான நீர் விநியோகத்தில் நஞ்சூட்டப்பட்டதாக அண்மையில் வெளிவந்த வதந்திகளை அவர் மறுத்துள்ளார்.

கொழும்பு நகருக்கு ஐந்து நீர்த்தேக்கங்களில் இருந்து தண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. விநியோகத்துக்கான நீர். தாங்கிகளில் சேமித்து வைக்கப்படுகின்றது. அவற்றுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நிலத்துக்கு அடியிலான குழாய்கள் மூலம் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே நீர் விநியோகமுறையில் நாசகார வேலைகள் மேற்கொள்வது இயலாத காரியமாகும்.

இது விஞ்ஞானரீதியில் முடியாத காரியமாகும்.

மாளிகாகந்தை நீர்த்தாங்கி 80 லட்சம் கலன் நீரைத் தேக்கி வைக்கக்கூடியது. எனவே இந்த நீரை மனித பாவனைக்கு தீங்கு இழைப்பதற்கு மாற்றுவதற்கு குறைந்தது 8 தொன் நஞ்சை கலக்க வேண்டியிருக்கும்.

மிக உயரத்தில் அமைந்துள்ள நீர்த்தாங்கிக் கோபுரத்துக்கு இவ்வளவு தொகையான நஞ்சுப் பொருளை நாசகார நபர் ஒருவர் எடுத்துச் செல்வது இயலாத காரியமாகும்.

அரசாங்கத்தை சீர்குலைக்குமுகமாக இத்தகைய ஆதாரமற்ற வதந்திகள் பரப்பப்படுவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (உ-3)

## டிரக்கில் 39 தமிழர்கள் ஜேர்மனிக்கு கடத்தல்

டிரக்கின் ''டிரெய்வர்'' ஒன்றுக்குள் அடைத்து ஜேர்மன் நாட்டுக்குள் கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு பெண்கள் உட்பட 39 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஜேர்மன் பத்திரிகை ஏஜென்சியான டி.பி.ஏ. தெரிவித்தது.

இரும்பு பைப்புகளை ஏற்றி வந்த ட்ரக் ஒன்றுக்குள்ளேயே — கடும் குளிரில் — ஆறு நாட்கள் ஒளித்து வைக்கப்பட்டு கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் இந்தநபர்கள் ஜேர்மன் நாட்டின் டொர்மஹன் நகரில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் கணிசமானோர் ஈழத்தமிழர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாம் ஒவ்வொருவரும் இவ்வாறு சட்ட விரோதமாக நாட்டுக்குள் நுழைவதற்காக 15ஆயிரம் டொயிஸ் மார்க் பணத்தைச் செலுத்தியிருந்ததாகவும் அவர்கள் விசாரணைகளின் போது தெரிவித்தனராம். (உ)

உயர் வர்க்கத்தினருக்கு

## போரின் யதார்த்தத்தை உணரவைத்த வெடிகுண்டு

### ரோய்ட்டர் தெரிவிப்பு

கொழும்பு, பெப் 10

உள்நாட்டுப் போரினால் இதுவரை பெருமளவு பாதிக்கப்படாதிருந்து வந்த உயர் மத்தியதர வர்க்கத்தினருக்கு போரின் யதார்த்தங்களை கொழும்பு குண்டு வெடிப்பு உணர்த்தியிருக்கிறது.

இவ்வாறு ரோய்ட்டர் செய்தி நிறுவனம் கருத்து வெளியிட்டுள்ளது.

போரைப்பற்றி பெருமளவுக்கு கவலைப்படாமல் பொழுது போக்காக 'கோல்ப்' விளையாடும் ஒருவர்க்கத்தினர் திடீரென மாண்டு விட்டார்கள். இது அரசாங்கத்தைப் பொறுத்தவரை உளவியல் ரீதியாக மிகவும் பயங்கரமான பின்னடைவாகும் என்று அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தது.

அடுத்த தாக்குதல் இலக்கு எதுவாக இருக்கும் என்று சகலரும் பீதியுடன் நோக்கிக் கொண்டிருக்கிறர்கள் என்றும் அது தெரிவித்தது.

(இ-3)

## ஐ. தே. கவின் அழைப்பை 5 தமிழ் கட்சிகள் ஏற்றன

### கூட்டணி தனித்துச் சந்திக்கும்

அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வருமாறு ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த அழைப்பை ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி ஆகிய ஐந்து தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த 5 கட்சிகளும் கூட்டாகவே பேச்சு நடத்தும்.

அதேசமயம் தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று சனிக்கிழமை ஐ. தே. கவுடன் தனித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. (இ-7)

## மேலதிக கொட்டகைகள் அமைக்க அரசு அனுமதி

சாவகச்சேரி, பெப். 10

இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி வசதி பெற மேலதிக கொட்டைகைகளை அமைக்க புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அனுமதி அழங்கியுள்ளது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப்பகுதிகளில் தங்கியுள்ள மாணவர்களும் அந்தந்தப் பகுதியில் இடம்பெயராதிருக்கும் மாணவர்களுக்கு கல்வி பயில தற்போதுள்ள பாடசாலைகளில் இடம்போதாது இருக்கும் பட்சத்தில் மேலதிகமாக கொட்டகைகளை அமைக்க புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (இ-3)

## நிதித்துறை அறிவித்தல்

### வைப்பகத்துக்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோருகிறது

★ தேவஞானி செல்வம் — இல. 205/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ அருணாசலம் கார்த்திகேசு — மே/பா. சிவானந்தன், இல. 51, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி.

★ செல்லையா சின்னத்துரை — குப்பிளான் சந்தி, ஏழாலை.

★ கே. சிவநாதன் (நவமணி) — இல. 37/5, வைமன் வீதி, நல்லூர்.

★ மகாலிங்கம் கார்த்திகேசு தம்பிராசா — இல. 37/3, வைமன் வீதி, நல்லூர்.

★ சண்முகநாதன் கார்த்திகேசு அல்லது தம்பிராசா அல்லது திருமதி அன்னம்மா தம்பிராசா — இல. 37/3, வைமன் வீதி, நல்லூர்.

★ முருகேசு குழந்தைவேலு — சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

★ திருமதி காந்தன் கீத்தா — அரியாலை கிழக்கு, அரியாலை.

★ தம்பு வைத்திலிங்கம் — ''சரிகிரி'', இராஜ வீதி, கல்வியங்காடு

★ திருமதி பூரணம் செல்லையா — குப்பிளான் சந்தி, குப்பிளான், ஏழாலை.

★ வல்லிபுரம் தெய்வேந்திரன் (ராமு) — சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு (பிரான்பற்று)

★ வைரமுத்து தம்பிராசா அல்லது தம்பிராசா தங்கரத்தினம் — பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ திருமதி சுபத்திராதேவி செல்வராஜா — இல. 1, புதிய செம்மணி வீதி, கல்வியன்காடு, நல்லூர்.

★ தம்பு காராளசிங்கம் — நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்.

★ திருமதி யோகம்மா குமாரசாமி — இல. 68, ஆனந்தன் வடலி வீதி. அரியாலை.

★ கமலா யோகநாதன் — இல. 15, நொத்தாரிசு லேன், அரியாலை.

★ பத்மாவதி கோபாலசிங்கம் — இல. 40, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை (புங்கன்குளம்).

★ செல்லத்துரை ஜெனானந்தன் — அம்பனை, சுன்னாகம்.

★ சாரதாதேவி சிதம்பரநாதன் — சோமசுந்தரம் தோட்டம், உடுவில், சுன்னாகம்.

★ அன்னலக்ஸ்மி செல்வரட்ணம் (ஆசிரியர்) — துவாரகை ஒழுங்கை, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

★ முருகேசு துரைராஜசிங்கம் — இல 25, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ கணபதிப்பிள்ளை ராமநாதன் — பாரதி வீதி, பத்தைமேனி, அச்சுவேலி.

★ கந்தையா தர்மலிங்கம் — கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ சிவமலர் பாலசுப்பிரமணியம் — அயட்டபுலம், குப்பிளான், ஏழாலை.

★ அன்னமுத்து இராசையா — மே/பா நல்லம்மா கிருஷ்ணர், டச்சு றோட், தொல்புரம், சுழிபுரம்.

★ செபஸ்தியாம்பிள்ளை அருளானந்தம் — பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டை.

★ கந்தையா சுப்பிரமணியம் — இல 203, கண்டி வீதி, அரியாலை.

★ செல்லத்துரை ஜெயதாஸ் அல்லது கந்தன் செல்லத்துரை — ஆறுமுகம் வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

★ சபா நாராயணன் (கிராமசேவையாளர்) — சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு.

★ றஞ்சினிதேவி மகாதேவன் — சூறாவத்தை, சுன்னாகம்.

★ எஸ். சவரிமுத்து மரியதாஸ் — இல 05/62, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.

★ புஸ்பராணி தவராஜசிங்கம் — மே. பா. ப. பாலகலிங்கம் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

★ கார்த்திகேசு கனகராஜசிங்கம் — மே/பா. ஆர். ரோபேட், எழுதுமட்டுவாள் தபாலகம், கட்டைக்காடு, கிளாலி.

★ திரு. திருமதி. ஜே. ஆர். ஏ. செபஸ்ரியான் — மே/பா. யூவி இராசநாயகம், தர்மலிங்கம் வீதி, கிளாலி, எழுதுமட்டுவாள்.

★ அஞ்சலா மில்டன் அல்லது அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ் — எழுதுமட்டுவாள், கிளாலி.

★ கனகம்மா கணபதி — உப்புவீல், எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள்.

★ சுகந்தா சுப்பிரமணியம் — 1 ஆம் யூனிற், இல 189, விஜன்னன்குனம், யோகபுரம், மல்லாவி.

★ திருமதி தயாநிதி துரைராசரத்தினம் — மே/பா. சந்திரதேவன், 12 ஆம் கட்டை, விசுவமடு

★ இராஜரட்ணம் கதிர்காமநாதன் — மே/பா. கே விவேகானந்தர், கைதடிமேற்கு, கைதடி.

★ வைரவி மார்க்கண்டு — புலோப்பளை, பளை.

★ முருகேசு தனபாலசிங்கம் அல்லது கனகம்மா கந்தராசா — மே/பா கனகரட்ணம் சிவராசா, வாகையடி ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை.

★ தம்பிமுத்து துரைராஜா (தவம்) — கைதடி தெற்கு, கைதடி.

★ நல்லதம்பி கணேசபிள்ளை — மே/பா. கே. மணியம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ சோமசுந்தரம் நடேசபிள்ளை — கற்குளி முருகன் கோவில், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

★ கிருஷ்ணன் கார்த்திகேசு அல்லது பரமேஸ்வரி கார்த்திகேசு, கச்சாய்.

★ கோபாலபிள்ளை விநாயகமூர்த்தி அல்லது திருமதி விநாயகமூர்த்தி — பழைய சங்கக் கடையடி, பழைய டச்சு வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதித்துறை....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ அந்தோனிப்பிள்ளை — மீசாலை தெற்கு, மீசாலை.

★ பூமாதேவி சுப்பையா — கைதடி தெற்கு, கைதடி.

★ திருமதி புஸ்பராணி ராஜேந்திரன் — மே/பா. கந்தையா, குயில்காடு, கைதடி.

★ திருமதி கனகமணி ரட்ணராஜா — நிடல்பிட்டி வீதி, மீசாலை தெற்கு, மீசாலை.

★ எஸ். பத்மராணி இராஜலிங்கம் — மே/பா. விக்னேஸ்வரன், தாவளை, இயற்றாலை, வரணி.

★ இராசமணி குணபாலசிங்கம் — கரம்பகம், மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

★ திருமதி சின்னப்பிள்ளை வல்லிபுரம் — கைதடி மேற்கு, கைதடி.

★ ராஜலக்சுமி நடராஜா மே/பா வேலுப்பிள்ளை யோகேஸ்வரன், நாவற்காடு, சுட்டிபுரம், கொடிகாமம்.

★ இராலட்சுமி கமலநாதன் — தம்பலகாமம், பளை.

★ சிவசிதம்பரதேசிகர் சச்சிதானந்த ஐயர் — கோயிலாக்கண்டி மத்தி. சிவன் கோவில், கைதடி.

★ கனகசபை கந்தசாமி — மே/பா. செல்வமணி, புலோலி கிழக்கு, புலோலி.

★ ஞானகலாவதி தங்கராசா — கெருடாவில், வல்வெட்டித்துறை.

★ சின்னத்தம்பி வேலுப்பிள்ளை — தவசிக்குளம், மிருசுவில்.

★ கபிரியேல் அருளப்பு — கிளாலி அந்தோனியார் கோயில்.

★ திரு / திருமதி B. K. சண்முகரட்ணம் — 56, புதியகுடியிருப்பு திட்டம், கேடில்ஸ் நகர், கெற்பலி, மிருசுவில்.

★ திரு / திருமதி கிருஷ்ணசிங்கம் — 56, புதிய குடியிருப்பு திட்டம், கெற்பலி, மிருசுவில்.

★ அருளப்பு தங்கராசா — மே/பா. பொன்னுத்துரை, கொன்பிட்டி எழுதுமட்டுவாள் தெற்கு.

★ நந்தினி குணரட்ணம் அல்லது குணரட்ணம் ஜீவானந்தன் — மே/பா. க. வைத்திலிங்கம், ஐயன் கோவிலடி, கொடிகாமம்.

★ திருமதி மகேஸ்வரி குகதாசன் — மண்டுவில் அம்மன் கோவில், மீசாலை, சாவகச்சேரி மேற்கு.

★ என். கனகரட்ணம் அல்லது திருமதி சரஸ்வதி நல்லையா—கற்குழி, பெரும் பிள்ளையார் கோவிலடி, சாவகச்சேரி.

★ கந்தையா மாரிமுத்து அல்லது தங்கம்மா மாரிமுத்து — ''கலா நந்தவாசம்'' எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள். (இ)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி
## பொன்னையா சிவஞானசுந்தரி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், இல. 465, 6 ஆம் யூனிற் இராமநாதபுரம் வட்டக்கச்சியைத் தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா சிவஞானசுந்தரி நேற்று மந்திகை வைத்தியசாலையில் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையாவின் (முன்னாள் இ. போ. ச. கணக்காய்வாளர் - கோண்டாவில்) அன்பு மனைவியும், பகீரதன் (லண்டன்), கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கைதடி கிழக்கு, கைதடியில் நடைபெறும்.

தகவல்:
க. பாஸ்கரன்
(மைத்துனர்)

கைதடி, கிழக்கு,
கைதடி.

(40717)

## சதாசிவம் கனகலிங்கம்

கோண்டாவிலை பிறப்பிடமாகவும், தற்போது கமல் வீதி மீசாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட சதாசிவம் கனகலிங்கம் நேற்று 09-02-1996 மாலை காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கமலாதேவி, பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), தயந்தினிதேவி (ஆசிரியை, கந்தரோடைகந்தையா வித்தியாசாலை), இரஞ்ஜனி (ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்), சிவகரன் (சுவிஸ்), சிவதாசன் (கொக்குவில் இந்துக்கல்லூரி A/L 94) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-02-96) பிற்பகல் 2-00 மணியளவில் இவரின் தற்போதைய இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவதாசன் (மகன்)
நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில்

தற்போதைய முகவரி:
C/o த. கனகசிங்கம்,
கமல் வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(40718)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

## பருத்தித்துறை வல்வை சிற்றூர்தி சேவை

சாவகச்சேரி, பெப். 10

இன்று சனிக்கிழமை முதல் பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறைக்கான குறுகிய தூர சிற்றூர்திச் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாக சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

வல்வெட்டித்துறையில் இருந்து காலை 8-00 மணி, முற்பகல் 10-30 மணி, பிற்பகல் 3-15மணி ஆகிய நேரங்களிலும்—

பருத்தித்துறையில் இருந்து காலை 9-15 மணி, பிற்பகல் 2-00 மணி, பிற்பகல் 4-30 மணி ஆகிய நேரங்களிலும்— சிற்றூர்திகள் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## நினைவுக்கல் நடல்

யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த கைதடி, சாவகச்சேரி வட்டப் பிரதேசத்தை சேர்ந்த மாவீரர்களின் திருவுருவப் படங்கள் இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத்தொடர்ந்துபூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கொடிகாமம் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நடப்படும்.

2 ஆம் லெப். மகாலிங்கம் (யோகராசா கருணாகரன்),

கப்டன் திருமால் (சிவகுரு தில்லையம்பலம்)

வீரவேங்கை ஓவியன் (சிறி பாலசிங்கம் தர்மபாலன்)

வீரவேங்கை அமுதாசன் (ஆறுமுகம் சிவகுமார்)

வீரவேங்கை பொற்கோ (அருளம்பலம் விக்னேஸ்வரன்) ஆகியோரின் திருவுருவப்படங்களே இன்று எடுத்துச் செல்லப்பட்டு நினைவுக்கல் நடப்பட உள்ளன.

(இ)

## இளம் பெண் எரிந்து மரணம்

உடல் முழுவதும் நெருப்பில் எரிந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப்பெண் ஒருவர் கடந்த வியாழனன்று அங்கு மரணமானார்.

வல்வெட்டியைச் சேர்ந்த யோகேஸ்வரன் தயாளினி (வயது 21) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். (உ-15)

## பொன் விழா நிகழ்ச்சி

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பொன் விழா நிகழ்ச்சித் தொடரின் இரண்டாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது. பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. சிவ. மகாலிங்கம் சிறப்புரை யாற்றுவார்.

(உ-3)

மாஹோ...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வும் —

நேற்று திருகோணமலையில் இருந்து புறப்பட்ட ''ஹபரண'' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் சர்வதேச [illegible] அறிவிக்கின்றனர்.

(இ-3)

## புலிகளை முறியடிக்க..

யைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்றும்— ஜனாதிபதி மேலும் சொன்னார்.

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளின் தலைநகரங்களில் இருந்தபடி தங்கள் போராட்டத்துக்கு நிதி திரட்டுகிறார்கள். அந்தப்பணத்தை வைத்துக்கொண்டு அவர்கள் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

வெளிநாடுகளில் உள்ள புலிகளின் தலைமையகங்கள் மீது அந்த நாடுகள் பயங்கரவாதத்தடை நடவடிக்கைகளை மேற்கொண்டால் புலிகளை எளிதாக முறியடிக்க முடியும். ஆயுதப் போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வரலாம். அதன் மூலம் சமாதானத்தை கொண்டு வரமுடியும். வெளிநாட்டு அரசாங்கங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கையில் இறங்கவேண்டும். ஐ. நா. உறுப்பு நாடு என்ற வகையில் இக்கோரிக்கையை விடுக்கிறேன் என்றும் கூறினார்

## பலத்த பாதுகாப்புடன்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட வெளிநாட்டு ராஜதந்திரிகளும் தமது வாகனத்தில் நேரடியாக நாடாளுமன்றம் செல்ல அனுமதிக்கப்படவில்லை நாடாளுமன்றத்தில் இருந்து சிறிது தொலைவில் அவர்களது வாகனங்கள் நிறுத்தப்பட்டு அவர்கள் பஸ் ஒன்றில் நாடாளுமன்றத்துக்குள் கூட்டிச் செல்லப்பட்டனர்.

நாடாளுமன்றப்பகுதியில் பெருமளவு சிப்பாய்கள் காணப்பட்டனர் (இ-3-7-6)

## பாதுகாப்பற்ற....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்றும் அவர் கூறினார்.

அனுராபண்டாரநாயக்கா பேசுகையில் ஜனாதிபதி ஹெலிக்கொப்டரில் நாடாளுமன்றம் வந்துள்ளார். அப்படியானால் பெரும் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்திப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளப்பட்டன என்று கேட்டார்.

கரிகாலனை பிடிக்க உதவுமாறு பொலீஸார் மக்களிடம் கேட்கிறார்கள்.

ஆனால் கரிகாலன் கிழக்கில் தாராளமாக நடமாடுகிறார் என்று,. அனுரா கூறினார். (இ-3-7)

## ஆண்டு பொதுக்கூட்ட முன்னறிவித்தல்

அன்புடையீர்!

காலம்:- 10 - 03 - 1996 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 10-00 மணி
இடம்;- திருநாவுக்கரசு வித்தியாலயம்
கொடிகாமம்

யாப்பின்விதி 13 (அ) இணங்கவும், 21 (எ) இணங்கவும், நியமனப் பத்திரம் தாக்கல் செய்யலாம்; பிரேரணைகள் இருப்பின் சமர்ப்பிக்கலாம். யாப்பின் விதி 21 (ஊ) இணங்க தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பப்படும். ஆனால் இடம்பெயர்ந்த மருந்தக உரிமையாளர்கள் இந்த தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காது விட்டாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொண்டு அன்றைய தினம் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

செயலாளர்
வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து
வணிகர் மன்றம்

(40719)

# மரண அறிவித்தல்

## சிவா இராசேந்திரம்
### (மனிப்பாய் சட்டத்தரணி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிரபல சட்டத்தரணியும், சமாதான நீதவானும், முன்னாள் பிரதேச சபைத் தலைவரும், சைவபரிபாலன சபைத் தலைவரும். வேலக்கைப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவும், தற்போது வி. எம். வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சிவா இராசேந்திரம் 09 - 02 - 1996 சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - திலகவதி ஆகியோரின் புதல்வரும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ஸ்கந்தலீலா (கொழும்பு), சிவஸ்கந்தா (கொழும்பு), லீலமனோகரி, ஹரிவசனி (கொழும்பு), வசந்தசேனன் (சட்டத்தரணி), வசந்தகுமார் (மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர்), திலகினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணாசலா, சரவணபவன், தியாகராஜா, சொர்ணரூபினி, பத்மினி, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி (விவாக, இறப்பு பதிவாளர் —மானிப்பாய்), சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், மு. சிவகுமாரன், சிலோ ஜனாதேவி, சகுந்தலாதேவி, பத்மினி, நிர்மலாதேவி ஆகியோரின் சிறிய தந்தையும், கலாநந்தி, பிரபாநந்தி, மயூரன், செந்தூரன், கஜேந்திரன்' தர்சினி தனுஜா, துஷயந்தன், சிவானி, காயத்ரி ஆகியோரின் அன்புப் பேரனும், கோகுலனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-2-96) பி. ப. 2. 00 மணியளவில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருறோம்.

தகவல்:
இ. வசந்தசேனன்
இ. வசந்தகுமார்

தற்காலிக முகவரி:-
235, வி. எம். வீதி,
பருத்தித்துறை.

(40128)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெ[illegible] அவர்களது தற்காலிகப் பணிமனையில் 10-02-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org